# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1888/2 - 2014 නොවැම්බර් මස 10 වැනි සඳුදා - 2014.11.10

*1888/2 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசு சபையின் 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்ளூராட்சி சேவைகள் (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய என்னால் தயாரிக்கப்பட்ட கட்டளைகள் இத்தால் வெளியிடப்படுகின்றன.*

ஏ. எல். எம். அதாஉல்லா (பா. உ.),
உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர்.

கொழும்பு,
2014, நவெம்பர் 07.

கட்டளைகள்

1. இக்கட்டளைகள் "உள்ளூராட்சி சேவையின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குரிய (விருப்பம் தெரிவிக்கப்படுவதற்கு இடமளித்தல்) கட்டளைகள்" எனப்படும்.

2. 2005, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதிய 1416/ 9 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் விளம்பரப்படுத்தப்பட்ட 1986 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி சேவை விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியச் சட்ட உத்தரவுகளை செயற்படுத்தும் (இதற்கு பின்னர் "குறிப்பிட்ட திகதி" என்று குறிப்பிடப்படுவன) திகதிக்கு முன்னர் நிரந்தர மற்றும் ஓய்வூதிய சம்பளத்துடன் பதவிக்குரிய நியமனம் பெற்றுள்ள மகளிர் உறுப்பினர்களுக்கு இந்த உத்தரவு உரித்துடையதாகும்.

3. குறிப்பிட்ட திகதி வரைக்கும் சேவையில் இருந்து மற்றும் நிதியத்திற்கு பங்களிப்பு செய்து தொடர்ச்சியான விருப்பத்தினை தெரிவிக்க முடியாத சேவையில் இருக்கும் எந்தவொரு மகளிர் உறுப்பினருக்கும்–

   (அ) இக்கட்டளைகள் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்ட திகதிக்கு பின்னரும் நிதியத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு தொடர்ச்சியான விருப்பத்தினை தெரிவிக்க முடியும் ;

   (ஆ) இந்நிதியத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு விருப்பத்தினை தெரிவிக்கக்கூடிய இறுதித்திகதியாக 2014.12.31 ஆந் திகதி இருக்கும்.

4. (1) 2 ஆவது கட்டளைக்கு உரிய குறிப்பிட்ட சேவையில் இருக்கும் எந்தவொரு மகளிர் உறுப்பினரும் குறிப்பிட்ட திகதி மற்றும் 2014, திசெம்பர் 31 ஆந் திகதி ஆகியனவற்றிற்கு இடைப்பட்ட காலத்தில் நிதியத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு விருப்பத்தினை தெரிவீக்க முடியாது இறந்திருக்கும்பட்சத்தில் அவரது பின்னுரித்துக்காரர் மூலம் அச்செல்லுபடியாகும் காலத்தினுள் அது தொடர்பான விருப்பத்தினை தெரிவிக்க முடியும்.

(2) 4 (1) ஆவது கட்டளைக்கு உரிய சேவையிலுள்ள மகளிர் உறுப்பினர் இறந்துவிட்ட திகதிக்கு பின்னர் வரும் திகதியிலிருந்து, 5 (2) ஆவது கட்டளைப்படியுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய அவரது தபுதாரர் மற்றும் / அல்லது அநாதைக் குழந்தை மற்றும்/அல்லது அநாதைக் குழந்தைகள் 1986 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சேவையின் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சம்பள நிதியத்தின் சட்டதிட்டங்களுக்குரிய விதிகளுக்கு அமைய உண்மையாக உரித்துக்குரியவர் மற்றும்/அல்லது உரித்துடையவர் எனக் கருதப்படல் வேண்டும்.

5. (1) 3 ஆவது கட்டளைப்படி நிதியத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு விருப்பினைத் தெரிவித்துள்ள சேவையிலுள்ள சகல மகளிர் உறுப்பினர்களும் தமது முதல் நியமனத்திகதி தொடக்கம் விருப்பினைத் தெரிவித்துள்ள திகதி வரைக்குமுள்ள கணக்கு நிலுவை மற்றும் அதற்குரிய வட்டி ஆகியவற்றினை ஒரே தடவையில் நிதியத்திற்கு செலுத்த வேண்டும்.

(2) 4 (1) ஆவது கட்டளைக்குரியவாறு சேவையிலுள்ள மகளிர் உறுப்பினரது குறிப்பிட்ட திகதி தொடக்கம் அவர் இறுதி வரை சேவையில் ஈடுபட்டுள்ள திகதி வரைக்குமுள்ளவாறு கணக்கு நிலுவை மற்றும் அதற்குரிய வட்டி ஆகியவற்றினை அம்மகளிர் உறுப்பினரின் தபுதாரர் மற்றும்/ அல்லது அநாதைக் குழந்தை மற்றும்/ அல்லது அநாதைக் குழந்தைகளினால் நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும்.

6. 5 ஆவது கட்டளையில் குறிப்பிடப்படுவதாவது கணக்கு நிலுவையினை கணக்கிடுவது ஓய்வூதிய சம்பள சுற்றறிக்கை 3/2008 ற்கு அமைவாக இருக்க வேண்டும்.

11- 696

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.